மலர் : 10 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 10

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्ड विल्लज मिनिस्ट्री

ഹൺറഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**ஆகஸ்டு 2010**

ஆண்டுசந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ. 250

# 100- கிராம ஊழியம்

**TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை**




**TVGM - 2010 ஆகஸ்டு**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

**தலைமுறை**
**தலைமுறையாக இருக்கும்**
**அஸ்திபாரங்கள்மேல்**
**நீ கட்டுவாய்.**

ஏசாயா 58 : 12



திருச்சி மாவட்டம் – **பஞ்சப்பூர் தொழுநோயாளர் காலனியில்** கட்டபபட்டு வரும் **சமூகக்கூடாரம் /** ஆராதனைக் கூடாரம் சீக்கிரத்தில் கட்டி முடிக்கப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## TAMIL VILLAGE GOSPEL MISSION

**CHIEF EXECUTIVE OFFICER** **Letter Dated: 15.07. 2010**



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு,

கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள் !

கர்த்தருடைய கிருபையினால் 2010 ஜுன் மாதத்தில் 4 ஜெபவீடுகள் ( **லிங்கம்பட்டி, T.கல்லுப்பட்டி, கன்னிவாடி, சானிபூண்டி** ) பிரதிஷ்டை செய்யப்பட்டது. சிங்கப்பூர் - **பாஸ்டர். ஜோசப் ஜெபமணி** அவர்கள் தேவனுடைய நாம மகிமைக்கென்று 4 ஜெபவீடுகளையும் பிரதிஷ்டை செய்தார்கள்.

திருச்சி - பஞ்சப்பூர் தொழுநோயாளர் காலனியில் கட்டப்பட்டு வரும் சமூகக் கூடாரம் / ஆராதனைக் கூடாரம் விரைவில் கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.

2010 ஜுன் 30 அன்று TVGM தலைமை அலுவலகத்தில் TVGM & TASOL நிர்வாகக்குழு ஐக்கியக் கூடுகை தேவனுடைய மகிமைக்கென்று நடைபெற்றது.

மேலும் ஜுன் மாதத்தில் பெரம்பலூர் மாவட்டம் - வேப்பந்தட்டை யூனியனில் **100**-கிராம ஊழியம் நடைபெற்றது. 51 தன்னார்வத் தொண்டர்கள் பங்குப் பெற்றார்கள். 12,016 சுவிசேஷப் புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டது. பின்தொடர் பணிக்காக 245 பேர் தங்கள் முகவரியை கொடுத்துள்ளார்கள். தேவனுக்கே மகிமை !

**2010** ஆகஸ்டு மாதம் திருப்பூர் மாவட்டம் - பல்லடம் யூனியனில் நடைபெறும் **100** - கிராம ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.

தொடர்ந்து TVGM ஊழியங்களை உங்கள் ஜெபத்தினால் தாங்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக !

கிறிஸ்துவின் பணியில்,

**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**

# தலைமுறை தலைமுறையாக இருக்கும் அஸ்திபாரங்கள்மேல் நீ கட்டுவாய். ஏசாயா 58 : 12

கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்காக காத்திருக்கும் சகோதர, சகோதரிகளே!

இந்த மாதம் **கர்த்தர் உங்களுக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம்:**

***ஏசாயா 58:12***
***தலைமுறை தலைமுறையாக இருக்கும் அஸ்திபாரங்கள்மேல் நீ கட்டுவாய்.***

அன்பு கர்த்தருடைய பிள்ளைகளே! இன்று பல மனிதர்கள் தங்களது வாழ் நாளிலே பொருளால் ஆசீர்வாதத்தை தங்கள் பிள்ளைகளுக்கு நிர்மானிக் கிறார்கள். தங்கள் பிள்ளைகளை வெளி நாட்டிற்கு அனுப்பி வாழ்வு அமைய உதவுகிறார்கள். ஆனால் பல தடவைகள் அவர்கள் இந்த உலகில் சேர்க்கும் சொத்துக்கள் அடுத்த தலைமுறையில் சிதறிப் போகிறது. ஆனால் கடவுளின் பிள்ளைகளான நமக்கு ***"தலைமுறை தலைமுறையாக இருக்கும் அஸ்திபா ரங்கள்மேல் நீ கட்டுவாய்"***என்று வாக்குத்தத்தமாக தருகிறார்.

முக்கியமாக கர்த்தர் கொடுக்கும் வாக்குத்தத்தத்தின் பின்னணியில் நாம் இந்த அதிகாரத்தை வாசிக்கும்போது, உண்மையான உபவாசத்திற்கு முக்கியத் துவம் கொடுக்கப்படுகிறது. கர்த்தரின் பார்வையில் ஏற்புடையதாக, முறையான அடிப்படையில் உபவாசித்து ஜெபிப்பதை பழக்கமாக உருவாக்கிக் கொள்ள வேண்டும். அப்படி செய்யும்போது, கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஆசீர்வாதம் எல்லையற்றது. அது நம்முடைய வரும் தலைமுறைக்கு விரிவடையும்.

***ஏசா.58:11 ல் "நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும், வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய்"*** என்று வாசிப்பதுபோல் நாம் நீர்ப்பாய்ச் சலான தோட்டத்தைப் போலிருப்போம்.

தேவன் நாம் அவருடைய கட்டளை களுக்கு கீழ்படிந்து, அவருடைய கட்டளை களை கைக்கொள்ள வேண்டுமென எதிர் பார்க்கிறார். அப்படி நாம் செய்யும்போது ***யாத்.20:6ல் "என்னிடத்தில் அன்புகூர்ந்து என் கற்பனைகளை கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கம் செய்கிறவராயிருக்கிறேன்"*** என்று வாசிப்பதுபோல், அவருடைய அன்பு ஆயிரம் தலைமுறைக்கு விரிவடைகிறது. மேலும் ***உபா.7:9ல் உன் தேவனாகிய கர்த்தரே தேவன் என்றும், தம்மில் அன்பு கூர்ந்து, தமது கற்பனை களைக் கைக்கொள்ளுகிறவர்க ளுக்கு அவர் ஆயிரம் தலைமுறை மட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன்"*** என்று வாசிக்கிறோம்.

நம்முடைய வாழ்க்கையிலே தேவன் அற்புதங்களை செய்யும்போது, நம்முடைய வருங்கால தலைமுறைக்கு விளக்குவதற்காக அற்புதத்தோடே சம்மந்தப்பட்டவைகளை பாதுகாக்க வேண்டும். இதற்கொப்பான நிகழ்ச்சியை ***யாத்.16:32ல் "அப்பொழுது மோசே: கர்த்தர் கட்டளையிட்ட காரியம் என்னவென்றால், நான் உங்களை***

***எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபோது, வனாந்திரத்தில் உங்களுக்குப் புசிக்கக் கொடுத்த அப்பத்தை உங்கள் சந்ததியார் பார்க்கும் படிக்கு, அவர்களுக்காக அதைக் காப்பதற்கு அதிலே ஒரு ஓமர் நிறைய எடுத்து வைக்க வேண்டும்***'' என்றான்.

இன்று நவீன தலைமுறையின் பல பிள்ளைகளுக்கு பெரியோரோ, பெற்றோரோ சொல்வதில் ஆர்வம் இல்லை. ஆனால் நாம் ***உபா.32:7ல் "பூர்வநாட்களை நினை; தலை முறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைக் கவனித்துப் பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான்; உன் மூப்பர் களைக் கேள், அவர்கள் உனக்கு சொல்லுவார்கள்"*** என்று வாசிப்பதி லிருந்து கற்றுக் கொள்வது தேவை. அதைப் போல ***யோபு 8:8ல் "நீர் முந்தின தலைமுறையாரிடம் விசாரித்து அவர்கள் முன்னோர்களின் செய்தியை ஆராய்ந்து பாரும்"*** என வாசிக்கிறோம்.

***ஆதி.17:7ல் "உனக்கும் உன் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும், உனக்கு பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்த திக்கும் நடுவே என் உடன்படிக் கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்"*** என்று வாசிப்பதுபோல நம் தேவன் தமது உடன்படிக்கையை ஒரு தலைமுறையல்ல, பல தலைமுறைக்கும் வைத்திருக்கும் தேவன்.

மேலும் ***சங்கீதம் 33:11ல் "கர்த்த ருடைய ஆலோசனை நித்திய கால மாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகளை தலைமுறை தலை முறையாகவும் நிற்கும்"*** என்று நாம் வாசிப்பதுபோல கர்த்தருடைய திட்டங்கள் தலைமுறை தலைமுறைக்கும் அசையாமல் நிற்கும்.

சங்கீதம் 100:5ல் ***"கர்த்தர் நல்லவர்; அவர் கிருபையென்று முள்ளது, அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது"*** என்று வாசிப்பதுபோல் அவர் கிருபையும் உண்மையும் தலைமுறை தலைமுறைக்கும் தொடர்கிறது.

ஏசாயா 5:8ல் ***"பொட்டுப்பூச்சி அவர்களை வஸ்திரத்தைப் போல் அரித்து, புழு அவர்களை ஆட்டு மயிரைப் போல் தின்னும்; என்னுடைய நீதியோ என்றென்றைக்கும் நிலைக்கும், என் இரட்சிப்பு தலைமுறை தலைமுறைதோறும் இருக்கும்."***

நம் வருங்கால தலைமுறைக்கு அஸ்திபாரமாக இருக்க ஏழு காரியங்களை நாம் செய்வது தேவை!

**1. மனந்திரும்புதல் - ஆவிக்குரிய புதுப்பித்தல்**
**2. பரிசுத்த ஆவியின் நடத்துதலை பின் தொடர்வது**
**3. வெளிப்படுத்துதலை எதிர்பார்ப்பது**
**4. தேவ வசனத்திற்காக பசி**
**5. கர்த்தருக்கு மட்டுமே மகிமையும் கனமும் செலுத்துவது**
**6. கர்த்தருக்கு ஊழியம் செய்ய விருப்பம்**
**7. அவருடைய இராஜ்யத்திற்காக நம்மையே விற்பது.**

**முதலாவது :** உங்கள் வருங்கால சந்ததிக்கு நீங்கள் அஸ்திபாரமாகும் முன் நீங்கள் மனந்திரும்பி உங்கள் கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் பழுது பார்க்க வேண்டுமென கர்த்தர் எதிர் பார்க்கிறார். அவருடைய பார்வையில் குற்றமற்றவராக ஆவதே அவரின் வாஞ்சை. நீங்கள் ஆவியிலே புதுப்பிக் கப்பட, இரட்சிக்கப்படவும், மீட்கப்படவும்

தமது ஒரேபேரான குமாரனை அனுப்பினார். ***மத்தேயு 5:6ல் "நீதியின் மேல் பசிதாகம் உள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் திருப்தியடைவார்கள்"*** என்று வாசிப்பதுபோல் நாம் மனந்திரும்பி, நீதிக்காக தாகமடைய வேண்டும்.

**இரண்டாவதாக :** நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் பரிசுத்த ஆவியின் நடத்துதலை பின்தொடர்வதை கர்த்தர் எதிர்பார்க்கிறார். நீங்கள் பரிசுத்த ஆவியை பின்தொடரும்போது மட்டுமே, நீங்கள் அவர் சித்தத்தின்படி நடக்க முடியும். ***யோவேல் 2:28 " மாம்சமான யாவர்மேலும்,என் ஆவியை ஊற்றுவேன்"*** அதை எதிர்பாருங்கள். நம்புங்கள். அதை தேடுங்கள்.

**மூன்றாவதாக :** நீங்கள் உங்கள் வாழ்க்கையில் வெளிப்படுத்துதலை எதிர் பார்க்க வேண்டும். வெளிப்படுத்துதலை அதிகமாக பார்க்க கர்த்தரின் மகிமையை உங்கள் வாழ்க்கையில் அதிகமாக காணலாம். இதை ***ஆபகூக் 3:2ல் "கர்த்தாவே நீர் வெளிப்படுத்தி னதை நான் கேட்டேன். எனக்கு பயமுண்டாயிற்று"*** என்று வாசிக்கிறோம்.

**நான்காவதாக :** கர்த்தருடைய வார்த்தைக்காக பசியோடு வேண்டும். அந்த வார்த்தையே தலைமுறை தலைமுறைதோறும் நடத்தி செல்லும். அவருடைய வார்த்தையை அதிகமாக வாசிக்கும்போது, நீங்கள் அவரில் அதிகமாக வளர்ச்சியடைவீர்கள். இதை ***அப்.17:11ல் "அந்தப் பட்டணத்தார் மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, . . . தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால்"*** என்று நாம் வாசிக்கிறோம்.

**ஐந்தாவதாக :** நாம் வெற்றி பெறும்போ தெல்லாம் மகிமையை அவருக்கே கொடுக்க வேண்டும். இந்த உலகம் உங்களை போற்றலாம். ஆனால் நீங்கள் மகிமையை அவருக்கே செலுத்த வேண்டும். ***கொலே.1:18ல் "எல்லாவற்றிலும் முதல்வராய் இருக்கும்படி"*** என்று வாசிப்பதுபோல் நம் தேவன் முதல்வராயிருக்கிறார்.

**ஆறாவதாக :** அவர் உங்கள் வாழ்க்கையில் செய்தவைகளுக்காக, அவருக்கு ஊழியம் செய்ய மனதாயி ருப்பது அவசியமானதாகும். அவருக்கு அதிகமாக ஊழியம் செய்தால், கர்த்தரை அதிகமாக திருப்திப்படுத்தலாம். இதை ***எபே.4:12,13ல் "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காக அவர் சிலரை அப்போஸ்தலராகவும் ... ஏற்படுத்தினார்"*** என்று வாசிக்கிறோம்.

**ஏழாவதாக :** அவருடைய இராஜ்யத்தின் மகிமைக்காக உங்களையே நீங்கள் விற்க வேண்டும். ***மத்.19:21 ல் "இதோ நாங்கள் எல்லாவற்றையும் விட்டு பின்பற்றினோமே"*** என்று பேதுரு இயேசுவிடம் சொன்னார். நீங்கள் கர்த்தரின் இராஜ்யத்தை கட்டும்போது, அவர் உங்களை இந்த உலகிலே அதிகமாக உயர்த்துவார். மட்டுமல்ல, உங்கள் வருங்கால தலைமுறையை கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

இந்த மாதம் கீழ்கண்டவாறு அறிக்கை செய்யுங்கள்:

***நான் உண்மையான வாழ்க்கை நடத்துவேன். நான் பல தலைமுறைக்கு அஸ்திபாரமாக இருப்பேன்.***

**தேவனுக்கே மகிமை!**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

# திருப்பூர் மாவட்டம் - பல்லடம் யூனியன்
# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்: 2010 ஆகஸ்டு 16** திங்கள் காலை 9 மணி முதல் **ஆகஸ்டு 20** வெள்ளி இரவு 10 மணி முடிய **பல்லடம் யூனியனிலுள்ள கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2010 ஆகஸ்டு 16** திங்கள் காலை **9 - 1** மணி

**கடைசி நாள் ஜெபம் : 2010 ஆகஸ்டு 20** வெள்ளி இரவு **7 - 10** மணி

**( 2010 ஆகஸ்டு 16 - 20 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**பெந்தெகொஸ்தே தேவ சபை**
**75, இரட்சகர் வீதி**
**சாமலாபுரம் - 641 663.**
**மங்கலம் வழி, பல்லடம் தாலுகா**
**திருப்பூர் மாவட்டம். செல்: 98654 04716**

உதவி செய்ய முன் வந்த Pr.**தோமா**, Pr.**செபஸ்தியான்** இவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி** : தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு** : 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.
**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**
2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும்** : சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94871 92763**

# பெரம்பலூர் - வேப்பந்தட்டை யூனியன் 100-கிராம ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையால் பெரம்பலூர் மாவட்டம் – வேப்பந்தட்டை யூனியனில் 21.06.2010 முதல் 25.06.2010 வரை **“100 கிராம ஊழியம்”** ஆசீர்வாதமாக நடைபெற்றது.

முதல் நாள் கிராம ஊழியர்கள் கூடி ஜெபிப்பதற்கு கிருஷ்ணாபுரம் **பாஸ்டர் லூக்காஸ்** அவர்கள் உதவி செய்தார்கள். முதல்நாள், , கடைசி நாள் உணவு, கூடுமிடம், இனிப்பு மற்றும் பார்சல் செலவுகளை பெரம்பலூர் **பாஸ்டர் பர்னபாஸ்** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து 15 மாவட்டங்களைச் சேர்ந்த 51 கிராம ஊழியர்கள் வந்து ஊழியம் செய்தார்கள். முதல் நாள் ஜெபத்தில் வேப்பந்தட்டை யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப் பட்டது. **சகோ. P.T. கிறிஸ்டோபர்** அவர்கள் கிராம ஊழியர்களை உற்சாகப்படுத்தி ஜெபத்தில் நடத்தினார்கள். பெரம்பலூர் **பாஸ்டர் சாம்சன் கிறிஸ்டோபர்** அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள். பின்பு கிராம ஊழியர்களை 12 குழுவாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தனித்தனியே கூடி தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்க ளுக்காக ஜெபித்தார்கள்.







நித்திய ஜீவ ஒளி ஊழியங்களின் சார்பில் யாவருக்கும் மதிய விருந்து அளிக்கப்பட்டது. 5 நாட்கள் கிராமங்களில் தங்கியிருந்து எல்லா வீடுகளுக்கும் வீட்டிற்கொரு யோவான் சுவிசேஷம், கைப்பிரதி, கொடிகளை வழங்கினார்கள்.

இவ்வாறாக கிராமங்களில் மொத்தம் 12,016 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 15,000 **இயேசுவே இரட்சகர்** என்ற கைப்பிரதிகளும் 3000 இதர கைப்பிரதிகளும், 10,000 சிலுவைக்கொடிகளும் இலவசமாக வழங்கப்பட்டது. இந்த ஊழியத்தில் சந்திக்கப்பட்டவர்களில் 245 புறமத நண்பர்கள் தங்கள் விலாசங்களைக் கொடுத்து வேதபாடங்களை தபால் மூலம் அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்கள். சகோ. பன்னீர்செல்வம் சகல வேலைகளையும் நேர்த்தியாக கவனித்துக் கொண்டார்.

ஊழியங்களை முடித்து கடைசிநாளில் கிராம ஊழியர்கள் நித்திய ஜீவ ஒளி சபையில் கூடி ஜெபித்து, கர்த்தர் கிராமங்களில் தங்களை எவ்வாறாக நடத்தினார் என்பதை சாட்சியாக சொல்லி தேவனை மகிமைப்படுத்தினார்கள். **பாஸ்டர் பர்னபாஸ்** தேவசெய்தி கொடுத்து, ஊழியர்களுக்கு சிறப்பான விருந்து மற்றும் இனிப்பு வழங்கினார்கள். TVGM மூலம் பிரயாணப்படியும் வழங்கப்பட்டது. பின்பு ஊழியர்கள் தங்களது ஊர்களுக்கு மகிழ்ச்சியோடு திரும்பி சென்றார்கள்.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

**குழு 1: சகோ. பிரேம் ஆனந்த், ஜோசப் முரளிதரன், வினுக்குமார், பாபுசாலமோன்.**

**விஸ்வக்குடி** கிராமத்தில் வீடு வீடாக சென்று யோவான் புத்தகம் கொடுத்து, அநேகருக்காக ஜெபித்தோம். இஸ்லாமியர் ஒருவருக்கு **ஆத்தும இரட்சிப்பைக்** குறித்து சொல்லி **இயேசு ஒருவரே நம் பாவங்களை சுத்திகரிக்க சிலுவையில் மரித்தார் என்று சொன்ன போது, ஒப்புக்கொண்டார்.** முகமதியர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் நாங்கள் கொடுத்த யோவான் புத்தகங்கள், கைப் பிரதிகளை சுக்குநூறாக கிழித்து போட்டி ருந்தார்கள். **தனப்பிரகாசம்நகரில்** ஒரு பெரியவரிடம் சுவிசேஷம் சொல்லி அவருக்காக ஜெபித்தோம். **கோல் இல்லாமல் நடக்க முடியாத அவர் ஜெபித்த பின் கோல் இல்லாமல் எழுந்து நடந்தார்.** மொத்தம் 1035 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 2: சகோ. பால்ராஜ், அந்தோணி, சூசைமாணிக்கம், தாவீது தங்கவேல்.**

**வெண்பாப்பூர், பெரிய வடகரை, இந்திரா காலனி** ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தோம். இந்திரா காலனியில் ஒரே ஒரு சகோதரி சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ள அதிக எதிர்ப்பு தெரிவித்தார்கள். பொதுவாக கிராமங்களில் எல்லோரும் புத்தகங்களை ஆர்வமாக வாங்கிக் கொண்டார்கள். **N.புதூரில்** ஒரு முஸ்லீம் சகோதரர் சுவிசேஷப் புத்தகத்தை திருப்பிக் கொடுத்து விட்டார். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 800 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3: சகோதரி வசந்தா ஸ்டீபன், அன்னக்கிளி, ஜெபமணி அம்மாள், கிளமெண்ட்ஸ்மேரி..**

**அரும்பாவூர்** ஊராட்சியிலுள்ள கிராமங்களில் சிலர் எதிர்ப்பு தெரிவித்தார்கள். பலர் சந்தோஷமாக புத்தகத்தை வாங்கிக் கொண்டார்கள். 10 வாலிப பையன்கள் சேர்ந்து ஒரு நல்ல பாம்பை அடித்திருக் கிறார்கள். அது அடி வாங்கி தப்பித்துப் போய்விட்டது. இதனால் பயந்து போன அவர்கள் எங்களைப் பார்த்ததும் பாம்பு மூலம் எங்களுக்கு எந்த தீங்கும் வரக் கூடாது என்று ஜெபிக்கக் கேட்டார்கள்.1000 யோவான் புத்தகங்கள், 820 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 4: சகோதரி மரியம்மாள், கிரேஸ் பத்மா, எஸ்தர்பேபி, அபியேல் அந்தோணியம்மாள்.**

**வெங்கனூர்** கிராமத்தில் ஊழியம் செய்தபோது பிசாசின் பிடியிலிருந்த ஒரு சகோதரனுக்காக ஜெபித்த போது, கர்த்தர் அவனை விடுதலையாக்கினார். நாங்கள் போகும் வழியில் ஒரு மணிபர்ஸ் ஒன்று கீழே கிடந்தது. எடுத்து பார்த்தபோது அதில் ரூ.120/– இருந்தது. யாராவது வந்து கேட்டால் கொடுத்து

விடுவோம் என்று காத்திருந்தபோது, 2 பெண்கள் ஓடி வந்து எங்களிடம் பணம் தொலைந்து விட்டது என்று கேட்டபோது, நாங்கள் கண்டெடுத்த பணத்தை கொடுத்தோம். அவர்கள் மிகவும் சந்தோஷமாக பெற்றுக்கொண்டார்கள். கிருஷ்ணாபுரம் கிராமத்தில் ஒரு வாலிபன் எங்களை தகாத வார்த்தைகளினால் பேசி துரத்தினான். அவனை இரட்சிக்கும் படியாக ஜெபித்து வந்தோம். மொத்தம் 1050 யோவான் புத்தகங்கள், 830 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 5: சகோதரி விமலா தாஸ், கஸ்தூரி, மரியாள் , அன்னாள்.**

**கொட்டாரக்குன்று** கிராமத்தில் வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்து, சத்தியத்தை அறிவித்தோம். யாவரும் ஆவலுடன் கேட்டனர். பல மணி நேரம் அதிக தூரம் நடந்து மக்களை சந்தித்து ஊழியம் செய்தோம். மொத்தம் 1100 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6: சகோதரி ராணி சந்திரா, லூாயிஸ் அம்மாள், செல்லக்கனி, தெபோராள்.**

நாங்கள் 10 கிராமங்களில் வீடு வீடாக சென்று யோவான் புத்தகம் கொடுத்தோம். சிலர் ஏற்றுக் கொண்டார்கள். பலர் பெற்றுக் கொள்ளவில்லை. பள்ளிக்கூட பிள்ளைகளுக்கு ஆசிரியரின் அனுமதி யோடு பாட்டு, கதைகளை சொல்லி சுவிசேஷம் அறிவித்தோம். மொத்தம் 1000 யோவான் சுவிசேஷப் புத்தகங்கள், 830 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7: சகோதரி மணியம்மாள், தேவகிருபை, சலோமி சம்மனசு, ரெபேக்காலட்சுமி, ரூத் கலாவாணி.**

**பாதாங்கி** கிராமத்தைச் சுற்றியுள்ள 10 கிராமங்களில் சுவிசேஷப் புத்தகங்கள் கொடுத்து, சத்தியத்தை அறிவித்தோம். ஒரு பையன் வாய் பேச முடியாதபடி பிசாசின் கட்டுக்குள் இருந்தான். அவனுக்காக ஜெபித்தபோது, உங்களை யார் இங்கு வரச் சொன்னார்கள் ? நானா வரச் சொன்னேன் என்று ஜெபம் பண்ண அவன் சம்மதிக்கவில்லை. அவனது தாய்க்காக ஜெபித்து, ஆலோசனை கூறினோம். 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8: சகோ. சிவக்குமார், யோசுவா, ஸ்டீபன்ராஜ், வின்சென்ட், ஆசீர்பாண்டி.**

**ப.களத்தூர்** கிராமத்தில் முஸ்லீம்கள் ஒன்றுகூடியிருந்த இடத்தில் இயேசுவைப் பற்றி பிரசங்கித்தபோது, மிகுந்த ஆர்வமாக கேட்டார்கள். அவர்கள் இருதயம் திறக்கப்பட்டதை நாங்கள் ஆவியில் உணர்ந்தோம். பசும்பலூர் கிராமத்தில் யாவரும் யோவான் புத்தகங் களை ஆர்வமுடன் வாங்கினார்கள். எங்களை அநேக வீடுகளுக்கு அழைத்து ஜெபிக்கும்படி கேட்டார்கள். அவர்களின் இரட்சிப்பிற்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 யோவான் புத்தகங்கள், 840 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9: சகோ.மாற்கு மாரியப்பன், டேனியல், ஆனந்தராஜ், நோவா.**

**வேப்பந்தட்டை** கிராமத்தில் வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்தோம். சிலர் தங்களுடைய வியாதி, பிரச்சனைகளுக்காக ஜெபிக்கச் சொன்னார்கள். மரவந்தம் கிராமத்தில் ஒரு வயதான அம்மாவிடம் யோவான் புத்தகம், சிலுவைக்கொடி கொடுத்தபோது, இது என்ன ஓட்டு போடுகிற ரசீதா என்று கேட்டார்கள். இவர்களுக்கு மெய்யான தெய்வம் இயேசு தான் என சொன்னோம். மொத்தம் 1000 யோவான் புத்தகங்கள், 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10: சகோதரி அந்தோணிமேரி, சீலா,அமிர்தம், ரோணிக்கம், சமாதானமேரி.**

**தேவையூர்** ஊராட்சியில் பலர் எங்களை அவர்களுக்காக ஜெபிக்கும்படி கேட்டார்கள். கால் விளங்காமல் இருந்த சகோதரிக்காக ஜெபித்தோம். கர்த்தர் விடுதலைக் கொடுத்தார். மொத்தம் 1080 யோவான் புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 11: சகோதரி எஸ்தர் சாலமோன், பிச்சையம்மாள், தேவபாக்கியம்,கிருபா**

**உடும்பியம்** கிராமத்தில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, சிலர் வேண்டாம் என்றார்கள். கள்ளம்பட்டி கிராமத்தில் பெரியசாமி என்பவருக்கு ஒரு கை மேலே தூக்கமுடியாமல் 4 வருடமாக கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். இவருக்கு இயேசுவைப் பற்றி சொல்லி ஜெபித்தோம். உடனே அவர் தன் கையை மேலே தூக்கி காண்பித்து என்னால் இப்போது தூக்க முடிகிறது என்றார். 780 யோவான் புத்தகங்கள், 810 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 12: சகோ.** டேவிட் செல்வராஜ், ஜெபமலைநாதன், பீட்டர் ராமலிங்கம், மகாராஜன்.

நாங்கள் சென்ற கிராமத்தில் ஒருவர் எங்களிடம் இப்படி புத்தகங்கள் கொடுப்பது உங்கள் பணமா? அல்லது வெளிநாட்டு பணமா? என்று கேட்டார். இது இந்திய பணம்தான், இயேசு தான் மெய்யான கடவுள் என்பதை மக்கள் தெரிந்து கொள்ள அவரைப் பற்றிய புத்தகம் கொடுக்கிறோம் என்றோம். முஸ்லீம்கள் சிலர் உங்கள் புத்தகம் வேண்டாம் என்றார்கள். 971 யோவான் புத்தகங்கள், 920 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம். **தேவனுக்கே மகிமை!**

## 2010 ஜுன் மாத இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை




கர்த்தருடைய கிருபையினால் 12.06.2010 அன்று காஞ்சிபுரம் மாவட்டம் – உத்திரமேரூர் யூனியன் **எடமச்சி** கிராமத்திலுள்ள **பெனியேல் சபை**யில் **இயேசுவை விரும்புவோர் முகாம்** நடத்தப் பட்டது. **பாஸ்டர் ஜேக்கப் செல்லமுத்து** இதற்கான ஏற்பாடுகளை செய்தார்கள்.

இம்முகாமிற்கு வரும்படி அழைப்புக் கடிதம் பெற்றுக்கொண்டவர்களில் ஒரே குடும்பத்தை சேர்ந்த இரண்டு பேர் மட்டும் ஆர்வமுடன் வந்து கலந்து கொண்டார்கள்.

இவர்களுக்கு **இயேசுவின் மேல் உள்ள விசுவாசம், பக்தி விருந்தியடையும் வகையில்**, இயேசு செய்த சில அற்புதங்களையும், அதிசயங்களையும் சொல்லி உற்சாகப்படுத்தினோம். **அவர்களும் இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்து, தங்கள் குடும்பத்திலுள்ள பிரச்சனைகளுக்காக ஜெபிக்கக் கேட்டார்கள்.**

**பாஸ்டர் ஜேக்கப் செல்லமுத்து** இவர்களுக்காக ஊக்கமாக ஜெபித்தார்கள். புதிய ஏற்பாடும், சிலுவைக் கொடியும் வழங்கப்பட்டது.

**தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

## இயேசுகிறிஸ்துவே கர்த்தர்
## துதி,கனம், மகிமை – இயேசுகிறிஸ்துவுக்கே!

# ஜெபத்திற்காக கடிதம் எழுதிய புறமத நண்பர்கள் வாழ்வில் இயேசு செய்த நன்மைகள்!

### வேலை கிடைத்தது!

நான் படிப்பை முடித்து 10 மாதங்கள் ஆகியும் வேலை கிடைக்காமல் வருத்தத்தில் இருந்தேன். தங்களுக்கு ஜெபிக்கும்படி கடிதம் எழுதினேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு கடந்த மார்ச் 11 ம் தேதி கல்லூரியில் விரிவுரையாளராக வேலை கிடைக்க கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை!

**– சகோதரி நந்தினி, கோவை.**

### தேர்வில் வெற்றி!

**சகோதரி பரிமளா, ராம்நாடு.**
என் மகனின் 10ம் வகுப்பு தேர்விற்காக ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு 430 மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற செய்தார். தேவனுக்கே மகிமை!

**சகோ. கணேசன், நெல்லை.**
என் அண்ணன் மகள் +2 தேர்வில் வெற்றி பெற கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் 1023 மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற செய்தார். தேவனுக்கே மகிமை!

## இது கர்த்தரால் வந்தது!

**சகோ. ஆரோக்கியம் – TVGM அறிமுகப்பணி ஊழியர்.**

எனது மகள் சோபியா TVGM தலைமை அலுவலகத்தில் ஊழியம் செய்து வந்தாள். மகளுடைய திருமணத்திற்காக வெகுகாலமாக பிரயாசப்பட்டும், ஜெபித்தும் வந்தோம். அநேகர் பொன், பொருள் வேண்மென்று கேட்டு வந்தார்கள். எங்களால் அவ்வளவு கொடுத்து திருமணத்தை நடத்தி வைக்க முடியால் வந்த வரன்களையெல்லாம் தட்டி கழித்து, எங்கள் தகுதிக்கு ஏற்ற வரன் வேண்டுமென ஜெபித்தோம். தலைமை அலுவலகத்திலும் அதிகமாக பிரயாசப்பட்டார்கள். ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு எங்கள் மகளுக்கு ஏற்ற மணமகனை கொடுத்து, ஏற்ற நேரத்தில் திருமணத்தை ஆசீர்வாதமாக நடத்தி தந்தார். TVGM ஸ்தாபகர் குடும்பம், அலுவலக ஊழியர்கள் மற்றும் சிறுவர் இல்லப் பிள்ளைகள் யாவரும் திருமணத்தில் கலந்து கொண்டு ஜெபித்து, ஆசீர்வதித்தார்கள். **இது கர்த்தரால் வந்தது** என்று விசுவாசித்து தேவாதி தேவனுக்கு நன்றி கூறுகிறேன்.

## தொலைபேசி ஜெபத்தின் மூலம் வெளிப்பட்ட தேவ வல்லமை!

**பாஸ்டர் முத்துவேல், அரியலூர்.**

ஒரு நாள் இரவு எனக்கு மிகுந்த வயிற்றுவலி ஏற்பட்டது. அந்த நேரத்தில் தொலைபேசியில் தங்களுடன் தொடர்பு கொண்டு ஜெபிக்கச் சொன்னேன். நீங்களும் பாரத்தோடு ஜெபித்தீர்கள். தேவன் ஜெபத்தைக் கேட்டு பூரண சுகத்தைக் கொடுத்தார். **தேவனுக்கே மகிமை!**

**2010 ஆகஸ்டு மாத இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : ஈரோடு   யூனியன் : அம்மாபேட்டை  நாள்: 21.08.2010

**கூடுமிடம்** பாஸ்டர் பால் விக்டர், GFW ஜெபஆலயம்
அரியாம்பள்ளம், அந்தியூர் ரோடு,
அம்மாபேட்டை - 638 311. ஈரோடு மாவட்டம்.
போன்: 98425 84597, 98424 55379.

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை & வாக்குத்தத்த தேவசெய்தி

தலைமுறை தலைமுறையாக இருக்கும்
அஸ்திபாரங்கள்மேல் நீ கட்டுவாய். ஏசாயா 58:12

**நடு இரவு ஜெபம் - மறு நாள் துதி ஆராதனை**

**நாள் :** 31.07.2010 சனி
**நேரம் :** 7PM முதல் 12Mid Night
**இராப்போஜனம் :** இரவு 12மணி

**நாள் :** 01.08.2010 ஞாயிறு
**துதி ஆராதனை நேரம் :** 7AM-7PM
**வாக்குத்தத்த செய்தி :** 7PM-8PM

**சிறப்பு செய்தி : சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபர்**

**நடைபெறுமிடம்**

**TVGM தலைமை அலுவலகம்,**
**100 – கிராமம்,**
**திருச்சி – 620 102.**

## TVGM புத்தக நிலையம்

கர்த்தருடைய கிருபையினால் TVGM சிறுவர் இல்லத்தில் பயின்று வரும் பிள்ளைகளுக்காக புத்தக நிலையம் ஒன்று அமைக்க இருக்கிறோம். உங்களிடம் பொது அறிவு, சரித்திரம், சுயசரிதை, அறிவியல், கணிதம், சமூகவியல், பொருளாதாரம், நீதி போதனை கதைகள், ஆங்கிலம், வேதாகம விளக்கவுரைகள் இதுபோன்ற புத்தகங்கள் இருக்குமாயின் தயவுசெய்து TVGM சிறுவர் இல்லத்திற்கு அனுப்பி வைத்து உதவும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். முகவரி: பக்கம் 16

# THE AMBASSADOR SCHOOL OF LEARNING
# TASOL
## கிறிஸ்தவ தலைமைத்துவத்தில் நேர்மை

பண்டைக் காலத்தை ஒப்பிடுகையில், இந்த சூழலில் பல தலைவர்கள் சிறப்பாக செயல்படுகிறார்கள். மற்றும் எழும்பி வருகிறார்கள். பல வட, தென் இந்திய தலைவர்கள் வெளிநாட்டிலும், இந்தியாவிலும் பயிற்றுவிக்கப் படுகின்றனர். ஆகையால் இதில் வளர்ச்சியும் சமீப காலத்தில் ஏராளம்.

தலைவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு இருக்கும்பொழுது, தாங்கள் அதின் தரத்தை வலியுறுத்தல் அவசியம். தலைவர்களின் நேர்மை அதிகமாக, தலைமைத்துவத்தின் தரம் அதிகமாகும்.

தலைமைத்துவம் அதன் உச்சத்தில் சமுதாய மாற்றத்தை அழைக்கிறது. மாற்றம் முழுமையான வழியில் தேவைப்படும்பொழுது, சமுதாயத்தை மாற்ற அர்ப்பணிப்பு, நம்பிக்கை, நேர்மையான தலைவர்களை ஒரு நிறுவனத்தை சரியான வழியில் நடத்த அழைக்கிறது.

அதிநவீனமான இன்றைய உலகில் ஒரு நல்ல தலைவர், அவருடைய நேர்மையை நவீனத்துடன் இணைக்கத் தெரிய வேண்டும். ஒரு தலைவர் அப்படி செய்ய இயலும்போது, ஒரு கிறிஸ்தவத் தலைவர் மற்ற உலகிற்கடுத்த தலைவர்களோடு ஒப்பிடுகையில் வேறுபட்டு நிற்பார்கள்.

இன்று கிறிஸ்தவ தலைவர்களின் எண்ணிக்கை வளரும்போது, கிறிஸ்தவர்களில் நேர்மையுடைய தலைவர்களை பெறுவது அவசியம். கிறிஸ்தவ தலைவர்களிடத்தில் நேர்மை குறைவு அபாயமான அழிவை நவீன சமுதாயத்திற்கு ஏற்படுத்தக் கூடும்.

### <u>நேர்மைமையுடைய தலைவர்கள் பெற்றிருக்கும் குணங்கள் :</u>

1. *'இல்லை' என்று சொல்ல கற்றுக் கொள்வது*
2. *தேவனிடமும் மனிதனிடமும் நல்ல உறவை பராமரிப்பது*
3. *தலைமைத்துவத்தில் எந்நிலையிலும் பகிரங்கம்*
4. *தாழ்மையை காத்துக் கொள்வது*
5. *அணுகுவதற்கு எளிமை*

***முதலாவது :*** இன்று 'இல்லை' என்று சொல்ல வேண்டியபொழுது, 'இல்லை' என்று சொல்ல பல தலைவர்களுக்கு தைரியம் இல்லை. நவீனத்தின் நிலையின் பக்கம் சார்ந்து விடுகின்றனர். ஒரு ஆரோக்கியமான மீன் நீரின் ஓட்டத்தை எதிர்த்து நீந்தும். அதைப் போலவே ஒரு நேர்மையான தலைவர் சூழ்நிலை தவறாக போகும்போதோ அல்லது நீரோட்டத்தோடே செல்லவோ நிர்பந்தப்படுத்தப்படும்பொழுதோ 'இல்லை' என்று சொல்ல தைரியம் பெற்றிருக்க வேண்டும்.

**மத்தேயு 5:37 "உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள். இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்".**

***இரண்டாவதாக:*** ஒரு நல்ல தலைவன் தேவனோடு ஒரு நல்ல உறவை பராமரிப்பவனாகவும், சமுதாயத்துக்கு கணக்கு கொடுப்பவனாகவும் இருக்க வேண்டும். ஒரு நல்ல தலைவன் தான் செய்வது சக்தி வாய்ந்ததாக இருக்க கடவுளோடும், மனிதனோடும் உள்ள உறவை சமசீர் செய்ய வேண்டும்.

***மூன்றாவதாக:*** தன்னுடைய நேர்மையை பற்றி அவரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு ஒரு தலைவன் பதிலளிக்க வேண்டும். இன்று வெளிப்படை பல தலைவர்களிடம் குறைவுபடுகிறது. பல தலைவர்கள் தங்களது தனிப்பட்ட நேர்மையை பகிர்ந்து கொள்ள போதுமான அளவு நேர்மையாக இல்லை. அது அவர்களிடம் கேட்கப்படக் கூடாத ஒரு கேள்வி என நினைக்கிறார்கள்.

***நான்காவதாக:*** ஒரு கிறிஸ்தவ தலைவர் தாழ்மையையும், ஊழியக்கார தலைமையையும் தனது ஒவ்வொரு நடக்கையிலும் கடைபிடிக்க வேண்டும். பல தலைவர்கள் தாழ்மையாயிருப்பது தங்கள் மதிப்பிற்கு கீழானது என எண்ணுகிறார்கள். ஆனால் தாழ்மையாக இருப்பதை தேவன் எதிர்பார்க்கிறார்.

நீதிமொழிகள் 3:34 "**இகழ்வோரை அவர் இகழுகிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்**".

***ஐந்தாவதாக:*** ஒரு தலைவர் அணுகுவதற்கு எளிதானவராக இருக்க வேண்டும். இன்று பல தலைவர்கள் எளிதாக அணுக முடியாதவர்களாக உள்ளனர். தங்கள் நிகழ்ச்சிகளில் அதிக ஈடுபட்டுள்ளனர். பலருக்கு தங்கள் குடும்பங்களுக்காக செலவிட நேரமில்லை. ஆண்டவர் அவரோடும், நமது குடும்பத்தோடும் நேரம் செலவிடுவதில் ஆர்வமாக உள்ளார்.

நாம் தலைமைத்துவ எண்ணிக்கையை விட தலைமைத்துவ தரத்தில் நோக்கம் செலுத்துவது கட்டாயமானதாகும். எண்ணிக்கை தேவையாக இருந்தாலும், அதிக அளவில் நேர்மை தலைமைத்துவத்தின் தரத்தை உயர்த்த இருக்க வேண்டும்.

**தலைவர்களை உச்சக்கட்ட நேர்மையுடன் நாம் பயிற்றுவித்து விருத்தியடைய ஜெபிப்போம்.**

**தேவனுக்கே மகிமை!**

## கன்னியாகுமரி மாவட்ட
## TVGM அறிமுகப்பணி அலுவலகம்
## 2010 ஜுன் மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 2010 ஜுன் மாத ஊழியங்களை கர்த்தரே வெற்றியாய் முடித்துத் தந்தார். குருந்தன்கோடு யூனியன் 100–கிராம ஊழியத்திற்கான முன்னேற்பாடுகளையும், ஊழியத்தின் தேவைகள் சந்திக்கப் படுவதற்காக எடுத்த முயற்சிகளையும் கர்த்தரே ஆசீர்வதித்தார்.

எனக்கும் தைராய்டு அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய ஒரு நிர்பந்தமான சூழ்நிலை வந்துவிட்டதால், நான் 20 நாட்களுக்கு மேலாக அலுவலகத்தில் இல்லாத பொழுது, இங்கிருந்த சகோதரிகள் ஒவ்வொருவரையும் கர்த்தரே அதிகமாக பெலப்படுத்தி, ஊழியத்தில் ஒரு குறைவுமின்றி அற்புதமாக வழிநடத்தினார். எனக்காக ஜெபித்த எல்லோருடைய ஜெபங்களையும் கேட்டு, கர்த்தர் என்னை விரைவில் குணப்படுத்தி, மீண்டும் ஊழியம் செய்ய பெலப்படுத்தியுள்ளார். ஊழிய அறிக்கையோடு தேவனுடைய நாம மகிமைக்காக இதை சாட்சியாக எழுதுகிறேன். எனக்காக ஜெபித்த, கரிசனையோடு விசாரித்த ஒவ்வொருவருக்கும் நன்றி!

**தேவனுக்கே மகிமை!**

கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவான்சலின்.**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001 செல்: **98658 26424** போன் : **04652 - 277251**

குறிப்பு: TVGM தலைமை அலுவலகத்தில் ஆராதனை நடத்தவும், சிறுவர் இல்லத்தை நடத்தவும், கம்ப்யூட்டர் தமிழ், ஆங்கிலம் தெரிந்தவர்கள் தேவை!

## TVGM ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புபவர்கள் கவனத்திற்கு!

எங்களது வங்கி கணக்கில் காணிக்கை செலுத்துவர்களோ அல்லது பணமாற்றம் செய்பவர்களோ தயவுசெய்து ஈமெயில் அல்லது கடிதம் மூலம் கணக்கு எண் மற்றும் எந்த காரியத்திற்காக பணம் அனுப்பப்பட்டது என்பதை தெரியப்படுத்துங்கள். அது உங்களுக்கு நாங்கள் உடனடியாக ரசீது அனுப்புவதற்கு உதவியாக இருக்கும்.

காணிக்கையை E.M.O. மூலம் அனுப்புபவர்களும் ஈமெயில் / கடிதம் மூலம் எந்த காரியத்திற்காக அனுப்பப்பட்டது என்பதை தெரியப்படுத்தும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தயவுசெய்து **முதலாவது எழுத்தின் மூலமும்,** பின்பு தொலைபேசி மூலமும் தெரியப்படுத்தி உதவுங்கள்.

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** மாதந்தோறும் நடைபெற்று வரும் 100–கிராம ஊழியத்தின் மூலம் ஆங்காங்கே அநேக சபைகள் உருவாகவும், அந்தந்த மாத 100–கிராம ஊழியத்திற்கு தேவையான ரூ.50,000/- சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** TVGM அறிமுகபணிக்கு தரிசனம் பெற்றவர்களை தேவன் தரும்படியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆரம்பிக்கப்பட இருக்கும் கிளை அலுவலகத்திற்கு சரியான இடம் மற்றும் பொறுப்பான நபர்கள் கிடைக்கும்படியாக ஜெபியுங்கள்.

**புதன் :** TVGM **ஏலீம் சிறுவர் இல்லம்** கட்டடப்பணிகள் ஆரம்பித்துள்ளோம். தேவைகள் சந்திக்கப்படவும், சமூகநலத் துறை ஆணையிட்டுள்ள சகல வேலைகளையும் முடிக்கவும், சமூக சேவை அதிகாரிகளின் கண்களில் தயை கிடைக்கவும், அரசாங்க அங்கீகாரம் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

**வியாழன்:** TASOL ன் நோக்கம்: உயர் மட்ட அதிகாரியாக வர ஆவமுள்ள புத்தி கூர்மையுள்ள ஏழை, எளிய பிள்ளைகளை பயிற்றுவித்து, பொருளாதார உதவி செய்து, நெகேமியாவைப் போல் கிறிஸ்துவுக்கு சாட்சியாக உருவாக்கப்படவும், தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

**வெள்ளி:** ஆலயம் இல்லாத கிராமங்களில் ஆலயம் கட்டப்பட தேவையோடு உள்ள அநேக நபர்களில் தேவன் நம் மூலம் கட்ட வேண்டிய இடங்களை கண்டு உதவி செய்ய, உதவி கரங்களை தேவன் எழுப்பி தரும்படியாக ஜெபியுங்கள்.

**சனி :** **பஞ்சப்பூர், சூறாவளிப்பட்டி** சபை ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற, ஆராதனை நடத்தி வரும் **பாஸ்டர் தேவதாஸ்** அவர்கள் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட, **பஞ்சப்பூர் சமூகக் கூடாரம்** கட்டி முடிக்கப்பட ஜெபியுங்கள்.

**ஞாயிறு :** TVGM ஊழியத்தை நேசிக்கிற, ஜெபிக்கிற, கொடுக்கிற தேவப் பிள்ளைகளின் ஆவிக்குரிதய வாழ்விலும், குடும்பத்திலும் தேவன் இரட்டிப்பான ஆசீர்வாதங்களை கட்டளையிட ஜெபியுங்கள்.

*****

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி.9:7

## TVGM தலைமை அலுவலக முகவரி

100-கிராம ஊழியம், ஜெபவீடு, சிறுவர் இல்லம், ( காணிக்கைகள் )
பத்திரிக்கை சந்தா, ஜெபவிண்ணப்பம் & சகல தொடர்புகளுக்கும்:-


**MR.STEPHEN CHRISTOPHER,**
**MANAGING DIRECTOR.**
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**"100 - VILLAGE"**
**SOMARASAMPETTAI, ( HOSPITAL STOP )**
**TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.**

STD Ph : 0- 431 - 2607241
FAX : 0- 431 - 2607446
CELL Bro.Stephen : 94871 92763
Bro.P.T Christopher : 94435 44628
Email : 100village@tvgm.org


*Website :*
**www.tvgm.org**
தினசரி வாக்குத்தத்தம், '100 கிராம ஊழியம்' அறிக்கை, மாதாந்திர வாக்குத்தத்த செய்தி மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள் வெளியிடப்பட்டு வருகிறது.

டிராப்ட், செக், M.T. அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண், காணிக்கையின் நோக்கம் யாவையும் TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள் Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.

**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டிய முறை**

TAMIL VILLAGE GOSPEL MISSION (100- கிராம ஊழியம், ஜெபவீடு)
T.V.G.M. SOCIAL SERVICE ( 80G வரிவிலக்கு உண்டு)
( சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)
T.V.G.M. PUBLICATION ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

**( அல்லது ) சகல ஊழியங்களுக்கும்**
**MR. STEPHEN CHRISTOPHER,**
SB A/c No:12491010 18538 CANARA BANK, Code : 1249 Puthur Branch, TRICHY.
இந்த கணக்கும் TVGM ஸ்தாபனத்திற்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.

**TVGM & TASOL - கமிட்டி உறுப்பினர் ஐக்கியக் கூட்டம்**







30.06.2010. புதன் அன்று TVGM தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற TVGM & TASOL கமிட்டி உறுப்பினர் ஐக்கியத்தில் **சகோ. ஸ்டீபன் & பெர்சிஸ்** பகிர்ந்து கொள்ளுதல்

**To**

**From** **Return Requested:**

TVGM , Hundred Village,
Somarasampettai, Trichy - 620 102. India.